DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | சிவா | Caste | : | |
| Father Name | : | ராஜ கோபால் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **06.07.2026.**

**PW - 23**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் தற்போது அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் காவல் நிலையதில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 19.01.2020 அன்று நான் லால்குடி காவல் நிலையத்தில் 2ம் நிலை காவலராக பணிபுரிந்த போது லால்குடி காவல் நிலைய குற்ற எண்.22/2020 இதச பிரிவு 302 வழக்கின் கீழான வழக்கில் இறந்துபோன பெரியசாமி என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு ஆஜர் படுத்த ஆய்வாளரிடம் அறிக்கை பெற்று லால்குடி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைக்க நடவடிக்கை எடுத்தேன். மறுநாள்

20.01.2020 அன்று மேற்படி பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை பெற்று அதை பணி மருத்துவரிடம் ஒப்படைத்து பிரேத பரிசோதனையின்போது பிரேதத்தை மருத்துவருக்கு அடையாளம் காட்டி பிரேத பரிசோதனை முடியும் வரை உடன் இருந்தேன். பிரேத பரிசோதனை முடிந்தவுடன் பிரேதத்தை உறவினர்களிடம் நல்லடக்கம் செய்ய ஒப்படைத்தேன். பிறகு நிலையம் வந்து அறிக்கை செய்தேன். அதன் பிறகு 28.01.2020 அன்று இறந்துபோன பெரியசாமியின் உடல் உள்ளுறுப்புக்களை லால்குடி அரசு மருத்துவமனையிலிருந்து பெற்று அவற்றை ஆய்விற்காக திருச்சி வட்டார தடய ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். நிலையம் வந்து அறிக்கை செய்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**(எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. )**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.